தேதி : 25.04.2025

அசல் வழக்கு எண் : 198/2020

வாதி தரப்பு சாட்சி 2 : திரு.சுப்பிரமணி ரெட்டி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டார்.

<u>4 வது பிரதிவாதிக்காக குறுக்கு விசாரணை</u>

வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் என்னுடைய பெரியப்பா மகனை வாதியின் தகப்பானர் விஜயாரெட்டிக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளோம். வாதியின் தாத்தா பெயர் சின்ன அப்பைய்யா (எ) நாராயண ரெட்டி. நாராயணரெட்டி என்பவருக்கு நான்கு மகன்கள் மற்றும் 5 மகள்கள் உள்ளனர். நான் சித்தன்னபப்பள்ளி என்ற ஊரில் பிறந்து வளர்ந்தேன். எனக்கு அந்த ஊரில் 30 ஏக்கர் சொத்து இருந்தது அதை 7 அண்ணன் தம்பிமார்கள் பாகம் பிரித்துள்ளோம். நாராயணரெட்டி என்பவருக்கு ஜுஜுவாடி கிராமத்தில் மட்டும் 4 1/2 ஏக்கர் நிலம் உள்ளது. விஜயா ரெட்டி தம்பி சிவாரெட்டி என்பவருக்கு எங்கு சொத்து கொடுத்துள்ளார்கள் என்றால் அவருக்கு எங்கு கொடுத்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது விஜயா ரெட்டிக்க ஜுஜுவாடி கிராமத்தில் 1ஏக்கர் 12 1/2 சென்ட் நிலம் கொடுத்துள்ளார்கள். நாராயண ரெட்டி குடும்பபம் பெரியகுடும்பம் என்றாலும் 30 ஏக்கருக்கு மேல் சொத்து இருக்கும் என்றால் சரியல்ல. நாராயணரெட்டியின் பிள்ளைடிளகள் பாகப்த்திரம் ஏற்படுத்தியுள்ளார்களா என்றால் நாராயணரெட்டி கியரம் பெற்ற 2 /12 ஏக்கர் நிலம் அவருடைய மகள்களுக்கு கொடுத்துவிட்டார். அவரிடம் இருந்த 4 1/2 ஏக்கர் நிலத்தை தலா 1 ஏக்கர் 12 1/2 செண்ட் கொடுத்து

விட்டார். அந்த 1ஏக்கர் 12 1/2 செண்ட் நிலத்தை 4 தம்பி மார்களுக்கு பிரித்துகொடுத்ததில் விஜயா ரெட்டியின் சொத்திற்கு கிழக்கு பக்கம் சிவா ரெட்டி நிலம், மேற்கு பக்கம் வேறு ஒருவரின் லே அவுட் உள்ளது. வடக்கு கிருஷ்ணாரெட்டி. தெற்கு வேறு ஒருவரின் லே அவுட் உள்ளது. தாவா சொத்தை சுற்றிலும் லே அவுட் பிளாட் போடப்பட்டுள்ளது. தாவா சொத்து லே அவுட் போடுவதற்காகத்தான் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். விஜயாரெட்டி மகன் ஸ்ரீநாத்ரெட்டி அவருடைய நிலத்தை பிளார் போட்டு விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதிகள் சுலேகா மற்றும் சியாமளா ஆகியோர் திருமணமாகி 10 அல்லது 15 வருடங்கள் ஆகிறது. தாவா சொத்து விஜயா ரெட்டி மற்றும் அவருடைய தம்பி சிவா ரெட்டி ஆகியோர் சேர்ந்து பிரதிவாதிக்கு விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த சொத்தை பிரதிவாதிக்கு விற்று 20 வருடங்கள் ஆகிறது என்றாலும் வாதிக்க 10 அல்லது 15 வருடங்கள் முன்பு தான் திருமணம் ஆகிஉள்ளது என்ாறல் அந்த விவரம் எனக்கு தெரிந்திருக்குமா என்றால் சரியல்ல. வாதிகள் என்னடைய அக்கா மகள்கள் என்றால் சரிதான். தாவா சொத்து 4வது பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் விஜயாரெட்டியின் அனுபவத்தில் உள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்த விவரம் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்க தெரியுமா என்றால் தெரியும் அவரிடம் பேசிப்பார்த்தோம் அவர் முடியாது என்று சொன்னதால் வாதிகள் வழக்கு தாக்கல் செய்தனர். எந்த சர்வே

என் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சர்வே எண் 673/3 சொத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எப்பொழுது விற்றார்கள் மற்றும் அதன் ஆவண எண் எனக்கு தெரியாது. தாவா சொத்து 20 வருடங்களுக்கு முன்பே விஜயாரெட்டி மற்றும் அவருடைய தம்பி மற்றும் அவருடைய மகள்கள் 4வது பிரதிவாக்கு விற்பனை செய்து விட்டர்கள் என்றாலும் 2020 ஆம் ஆண்டு அவர்கள் லேஅவுட் போட வரும் போது விஜயாரெட்டி மற்றும் அவருடைய பிள்ளைகள் அனைவரும் மிரட்டி பணம் கேட்டார்கள் என்றாலும் ்4வது பிரதிவாதி பணம் தர மறுத்தால் வாதிகளை வைத்து இந்த வழக்க தாக்கல்் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் உண்மையிலேயே பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்ததால் நாராயணரெட்டி சொத்துக்கள் மற்றும் வாரிசுகள் மீதும் வழக்கு தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல. வாதிகள் என் அக்கா மகள்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- B.Santhosh,
Additional District Judge,
Hosur.